monash public library service

CITY OF MONASH

# அங்கத்தினராவதற்கான நிபந்தனைகள்

- பெரும்பாலான வகையறாக்களுக்கான இரவல் காலம் 28 நாட்களாகும். 14 நாட்களுக்கு இரவல் வழங்கப்படும் பல ஊடக பதிப்புகள் இதில் அடங்காது. தற்சமயம் நடைமுறையில் உள்ள இரவல் வரையறைகள் பற்றி அறிய “நல்வரவு” (“Welcome”) என்ற தகவல் வெளியீட்டைப் பார்க்கவும்.
- இன்னொரு நூலக அங்கத்தினரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையைத் தவிர, கடன் வழங்கப்பட்ட புத்தக வகையறாக்கள் இருமுறை புதுப்பிக்கப்படலாம். புதுப்பித்தலை நேரடியாகவோ, தொலைபேசி மூலமாகவோ அல்லது இணையதள வசதி வாயிலாகவோ செய்துகொள்ளலாம்.
- நூலகத்தில் எதையும் இரவல் வாங்கும் சமயம் நூலக அட்டை காண்பிக்கப்பட வேண்டும். பெயரும், முகவரியும் கொண்ட சம்பிரதாயமான ஒரு அடையாளக்குறிப்பு காண்பிக்கப்பட்டால் விதிவிலக்கு வழங்கப்படும்.
- பெயர் அல்லது/மற்றும் முகவரியில் ஏதாவது மாற்றம் இருப்பின் மொனாஷ் பொது நூலகத்திற்குத் தெரிவிக்கும்படி அங்கத்தினர் வேண்டப்படுகின்றனர்.
- தகவல் காப்புச்சட்டம் 2000-த்தின்படி (The Information Privacy Act 2000) நூலக அங்கத்தினர்கள் நூலகப் பணியாளரிடம் சம்பிரதாயப்படியான செல்லுபடியாகும் அடையாளக் குறிப்பைக் காட்டித் தமது நூலகப் பதிவு விவரங்களைப் பெற இயலும்.
- உரிய திகதிக்குள் திருப்பப்படாத உருப்படிகளுக்கான அபராதத் தொகைகளுக்கு அங்கத்தினர்களே பொறுப்பேற்பர்.
- இரவலாய்ப் பெறப்பட்ட உருப்படிகளுக்கு ஏதும் சேதாரம் ஏற்பட்டிருப்பின் அவற்றைத் திருப்பும் சமயம் நூலகப்பணியாளரிடம் அது தெரிவிக்கப்பட வேண்டும். சேதாரத்திற்கான ஈட்டை நூலக அட்டையை வைத்திருப்பவரோ அல்லது அவரது பாதுகாவலரோ செலுத்த வேண்டும். வகையறாவின் அடக்க விலையும் மற்றும் திருப்பப்பட இயலாத ஒரு செயன்முறைக் கட்டணமும் இத்தொகையில் அடங்கும்.
- இரவல் பெறும் முன்னரே பொருட்களில் சேதாரம் ஏதும் காணப்படின் நூலகப்பணியாளரின் கவனத்திற்கு அது கொண்டுவரப்பட வேண்டும்.
- ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு உறுப்பிணர் அட்டை வைத்துக் கொள்ள உரிமையுண்டு. களவுபோன மற்றும் தொலைந்துபோன அட்டைகள் குறித்து நூலகத்திற்கு உடனடியாய்த் தெரியப்படுத்தப்பட வேண்டும். மாற்று அட்டை வழங்குவதற்குக் கட்டணம் உண்டு.
- அங்கத்தினராவதற்கான முழு நிபந்தனைகளின் (Extract from Local Law No 3 – Monash Public Library) பிரதி ஒன்றை நூலகப்பணியாளரிடம் கேட்டுப் பெறுங்கள்.